1987 நவம்பர் 12]

கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு குடிநீர் வசதி

67—(*வினா எண். 13209)—திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், நல்லூர் ஒன்றியம், கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க ஏதேனும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இவ்வாண்டு (1987) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கண்டப்பங்குறிச்சி கிராமத்தில் கையிறைப்பானுடன் கூடிய ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு போதுமான அளவிற்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு நீண்ட காலமாக தீராத பிரச்சினை, உப்பு நீர்தான் தற்போது வந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் குடையூர், சித்தூர், சாந்தியம் போன்ற கிராமங்கள் பயன் பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்திலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல குடிநீர் உப்பு நீராகத்தான் அங்கே கிடைக்கிறது. அங்கே கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்றை நிறுவலாம் என்று சொன்னால், போதுமான குடிநீர் ஆதாரங்கள் அந்தப் பகுதியிலே இல்லை. ஆகவே இந்த வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 78 அடி மீட்டர் ஆழத்திற்கு ஒரு ஆழ் குழாய்க் கிணறு தோண்டப்பட்டு இருக்கிறது. அந்தக் கிணற்றிலே இருந்து 48 அடி மீட்டர் ஆழத்திற்கு குடி தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. சிலவற்றிலே இந்தியா மார்க் கைப்பம்பு பொருத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மொத்தத்திலே 486 குடும்பங்கள்தான் இருக்கின்றன. அவர்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைத்துக் கொண்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்தில் மட்டுமல்லாமல் அருகில் இருக்கிற 4, 5 கிராமங்களிலும் இதைப்போன்று உப்புத்

தண்ணீர்தான் கிடைக்கிறது. கண்டப்பங்குறிச்சி அருகில் மணிமுத்தாறு நதி ஓடுகிறது. அந்த மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்தால், அந்தக் கிராம மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்து ஓவர் டாங்க் மூலமாகத் தண்ணீர் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மணிமுத்தாறு நதியிலிருந்து சில இடங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய விளக்கங்களைத் தருவார்களானால், அதையும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற பொறியாளர்களை வைத்துப் பரிசீலிக்கலாம்.

கரும்பு பண்ணை கார்ப்பரேஷன்.

68—(*வினா எண். 15570)—திருமதி. பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனைக் கலைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ''ஆம்'' என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் 70 இலட்சம் ரூபாய் நட்டத்தில் இருக்கிற போதே அதனைக் கலைத்து அந்த நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டுமென்று 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் வற்புறுத்தினோம். காலம் நீடிக்க நீடிக்க ஒவ்வொரு ஆண்டும் அந்த நட்டத்தின் அளவு உயர்ந்து ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்பு ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது தொழில்களை அரசு நட்டத்தில் நடத்த முடியாது என்று சொன்னார்கள். எனவே இந்தப் பண்ணையை தொடர்ந்து நட்டத்தில் நடத்திக் கொண்டிருப்பதை மாற்றி அதனை கலைத்து சீக்கிரமாக நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பதற்கும், அதில் பணி புரிகிற பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிப்பதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 1986 ஆம் ஆண்டு வரையில் 176 இலட்சம் ரூபாய் அளவிற்கு இந்தப் பண்ணைக் கழகம் நட்டம் அடைந்திருக்கிறது.